9. தீர்மானம்

ஐக்கிய அமெரிக்க குடியரசு நகரங்களில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை உறுப்பினர்கள் பலருடைய வேண்டுகோள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோள் இவற்றை ஏற்று, பேரவையின் சார்பாக ஒரு தீர்மானம் கொண்டுவரப்படுகிறது:

"நேற்றைய தினம் (11-9-2001) ஐக்கிய அமெரிக்க குடியரசின் தலைநகரான வாஷிங்டன், இரண்டு பெரிய நகரங்களான நியூயார்க் பென்சில்வேனியா ஆகியவற்றின்மீது பயங்கரவாதிகள் மிகப் பெரும் அளவில் தாக்குதல் நடத்தியிருப்பதை அடுத்து, அங்கு ஏற்பட்டுள்ள பெரும் அளவு மனித உயிர்கள் இழப்பு, ஏராளமான பொருள் சேதம் ஆகியவை குறித்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆழ்ந்த வருத்தமும் கொள்கிறது. அந்நகரங்களில் உள்ள இந்தியர்களின், குறிப்பாக தமிழர்களின் நிலைமை குறித்து கவலைகொள்கிறது. இத்தகைய பயங்கரவாதம் எந்த உருவிலும் மனித நேயத்திற்கெதிராக வெற்றிகொள்ள இயலாது என்றும், அதை எல்லா நிலைகளிலும் இப்பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது."

பிற்பகல் 12-35

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் வகையிலும், இன்னுயிரை இழந்தோருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித் துளிகள் எழுந்து நின்று அமைதிகாக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதிகாத்ததன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது)

8. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத்.*

(மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் தெலுங்கில் பேசினார்)